JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No.105/2021 Date:03.02.2023 P.W. 2

| | |
|---|---|
| பெயர் | : பூமணி |
| தந்தை பெயர், க/பெ | : செல்லக்கண் |
| முகவரி | : |
| கிராமம் | : |
| மாவட்டம் | : |
| ஜாதி | : |
| தொழில் | : |
| மதம் | : |
| வயது | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 03rd day of February 2023.

(1ம் எதிரி ஆஜரில் உள்ளார். A1, A4 ஆஜரில் இல்லை, பிரிவு 317 கு.வி.மு. ச பிரிவின் மூலம் மனு தாக்கல் செய்துள்ளார்கள்)

**முதல் விசாரணை தொடர்ச்சி** - 31.05.2017ம் தேதி காவல் துறையின் உதவி ஆய்வாளராக பணி புரிந்து மகள் திருமணத்திற்கு பணம் தேவைப்பட்டதால் வி.ஆர்.எஸ் கொடுத்து அதிலிருந்து ரூ.28,83,000 பணம் எனக்கு வந்தது. பணம் வந்ததற்கு அத்தாட்சியாக இந்தியன் பேங்க் ஸ்டேட்மெண்ட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ. 2**ஆகும். 1வது எதிரி 6 மாதம் என் வீட்டிலிருந்த போது 1வது எதிரியும் 2வது எதிரியும் செல்போனில் பேசிய உரையாடல் பதிவுகளை பென்டிரைவு மூலமாக என் மகள் மெர்லின் என்பவரிடம் கொடுத்துள்ளார். அதனை கம்பியூட்டரில் போட்டு தரவு இறக்கம் செய்து பென் டிரைவுடன் இணைந்த 65பி சர்ட்டிபிகேட் சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் பிரிவு 65பி இந்திய சாட்சிகள் சட்டம் சான்றுடன் தாக்கல் செய்துள்ளேன். அது **அ.த.சா.ஆ.3** ஆகும். மேற்படி உரையாடல்களை எழுத்து வடிவில் தமிழில் தட்டச்சு செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். 05.02.2018ம் தேதி என் மகள் மெர்லின் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு வரதட்சனையாக ரூ.8,00,000 லட்சம் கேட்டதால் அந்த பணத்தை 2வது எதிரி விஜியிடம் கொடுத்துள்ளேன். ரூ.8 லட்சம் வரதட்சனை வாங்கியதை 1வது எதிரியும், 2 வது எதிரியும் செல்போனில் பேசியுள்ளார்கள். அந்த தகவல்களை பென்டிரைவு மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். பெருங்குடியில் வாடகை வீட்டு அட்வான்சிற்கு என் மகளை குடித்தனம் வைக்க 1வது எதிரியிடம் ரூ.80,000 கொடுத்துள்ளேன். திருமணமான 2 மாதத்தில் மெர்லினின் 40 சவரன் நகைகளை என் மகளுக்கு தெரியாமல் 1வது எதிரியும் 2வது எதிரியும் அவர்களின் பெயரில் பேங்கில் அடமானம் வைத்து ரூ.5,70,000 பெற்றுள்ளார்கள். 40 சவரத்தில் 24 சவரனை ஒரு வருடம் கழித்து திரும்ப தந்தார்கள். மீதி 16 சவரன் நகைகளை திருப்பி தரவில்லை. நகை அடமானம் வைத்ததை 1வது எதிரியும் 2வது எதிரியும் செல்போனில் பேசியுள்ளார்கள். எதிரிகள் பெயரில் நகையை அடமானம் வைத்த ரசீதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ.4** ஆகும். 1வது எதிரி கார் வாங்கி கொடுத்தால் தான் உன் மகளோடு வாழ்வேன் என்று மிரட்டியதால் நாங்கள் ரூ.1 லட்சம் 2 நபர்களிடம் வட்டிக்கு வாங்கி என் மகள் மெர்லினின் 15 சவரன் நகைகளை பூமணியாகிய என் பெயரில் 02.03.2019ம் தேதி அடமானம் வைத்து ரூ.2,20,000 என் பெயரில் எடுத்து 03.03.2019ம் தேதி 1வது எதிரியிடம் ரூ.3,20,000 கொடுத்தேன். 1வது எதிரியும் ரூ.60,000 போட்டு ரூ.3,80,000 1வது எதிரி பெயரில் கார் வாங்கி கொடுத்தேன். மேற்படி ரு.2,20,000 யை நகை அடமானம் வைத்து பெறப்பட்டதை 1யும், 2வது எதிரியும் செல்போனில் உரையாடியதை நான் இந்நீதிமன்றத்தில் மேற்படி உரையாடல்களை பென்டிரைவு **அ.த.சா.ஆ.3** மூலமாக தாக்கல் செய்துள்ளேன். ரூ.2,20,000 யை எனக்கு திருப்பி தரவில்லை. என் பெயரில் நகை அடமானம் வைத்த ரசீது, நான் சாட்சி கையெழுத்து போட்டு கார் வாங்கி கொடுத்த ஆர்சி புக் நகல்கள் ரசீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ.5** ஆகும். மேற்படி கார் வாங்குவதற்கு நகையை அடமானம் வைத்ததற்கான ரசீதை

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ.6** ஆகும். நான் வட்டிக்கு வாங்கி கொடுத்த ரூ.1,00,000 யை 1வது எதிரி என் பேங்க் அக்கவுண்ட்டில் திருப்பி தந்தார். திருமணத்திற்கான மொத்த சாப்பாட்டு செலவு ரூ.12,00,000 ஆனது. அதில் ரூ.10,28,000 அசல் ரசீதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ.7** ஆகும். அதில் பாதி தருவதாக எனக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். இதுவரை அந்த பணத்தை தரவில்லை. கொடுங்கையூரில் 1500 சதுர அடி வீட்டை காட்டி என் மகள் திருமணத்தை முடித்துவிட்டு என் மகளுக்கு பெண் குழந்தை பிறந்த காரணத்தினால் குழந்தையும் மகளையும் வீட்டை விட்டு வெளியேற்றி 27.01.2021ம் தேதி ரூ.1 கோடி அந்த இடத்தையும் வீட்டையும் சேர்த்து விற்றுவிட்டார்கள். விற்றதற்கான ஆவணங்களின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ.8** ஆகும். திருவள்ளூரில் சமூக நல துறையில் வரதட்சனை சம்மந்தமாக புகார் கொடுத்து திருமதி பாண்டியம்மாள் என்பவர்களை விசாரித்து 03.02.2022ம் தேதி வரதட்சனை சம்மந்தமான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். அதில் மெர்லினுக்கு குழந்தைக்கும் ரூ.6,00,000 கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தார்கள். எனக்கு வரவேண்டிய 16 சவரன் நகை வரதட்சனையாக கொடுத்த 8 லட்சம் ரூபாய் வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்த ரூ.80,000 திருமணத்திற்கு செலவான ரூ,5,14,000 சமூக நல துறையில் பரிந்துரை செய்த ரூ.6,00,000 கார் வாங்கி கொடுத்த ரூ.2,20,000 மொத்தம் ரூ.22,14,000 இதனால் என் மகளின் வாழ்க்கையும் என் மகளின் குழந்தையின் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணத்தை எல்லாம் வாங்கிக் கொண்டு என் மகளையும் என் குடும்பத்தையும் சதிவேலை செய்து ஏமாற்றிவிட்டார்கள். இதனால் என் மகளுக்கு மனஉளைச்சல் ஏற்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்டு இன்றும் கவலையாக இருக்கிறார். நான் முதல் விசாரணையின் போது 11.02.2017ம் தேதி வட்டக்கோட்டையில் நிச்சியதார்த்தம் என்றும் சொல்லியிருந்தேன், அது 11.02.2018 ம் தேதி ஆகும். அனிமூன் சென்ற தேதி 13.02.2017ம் தேதி என்று சொல்லியிருந்தேன், அது 13.02.2018ம் தேதி ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**
கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur